# பேருந்து நிறுத்தங்களில் சுவரோவியம்:

# அனுமதிபெறாமல் வரையப்பட்டதால் அகற்றப்பட்டன

கோலாலம்பூர், மார்ச் 20- கோலாலம்பூரில் பல பேருந்து நிறுத்தங்களை அலங்கரித்திருந்த சுவரோவியங்கள் அகற்றப்பட்டுள்ளன. கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் அனுமதி பெறாமல் அந்த ஓவியங்கள் தீட்டப்பட்டதே இதற்கு காரணமாகும். அந்த சுவரோவியங்களைத் தீட்டுவற்கு சம்பந்தப்பட்ட ஓவியக் கலைஞர்கள் எங்களிடம் முறையான அனுமதியைப் பெறவில்லை. ஆகவே, நடப்பில் உள்ள பராமரிப்பு விதிமுறைகளுக்கேற்ப அவை அகற்றப்பட்டுள்ளன என்று மாநகர் மன்றம் குறிப்பிட்டது.




பக்கம் 13




## பேருந்து நிறுத்தங்களில்...

ஜாலான் ராஜா அஸ்லான் ஷா (முன்பு ஜாலான் ஈப்போ) சாலையில் உள்ள பேருந்து நிறுத்தம் மோசமான நிலையில் இருந்ததால் அது முற்றாகத் தகர்க்கப்பட்டது என்றும் அது கூறியது.

இவ்வாண்டு கோலாலம்பூரில் ஆசியான் கூட்டங்கள் நடைபெறவிருப்பதை முன்னிட்டு அம்மாநகரில் உள்ள இருபத்தோரு பேருந்து நிறுத்தங்கள் மற்றும் பெட்டிக்கடைகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக சுவரோவியங்கள் அகற்றப்படுகின்றன. கோலாலம்பூரை அழகுபடுத்தும் ஓவியச் சமூகத்தின் முயற்சிகளை மாநகர் மன்றம் பாராட்டுகிறது. அதே வேளையில், நகர்புறச் சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் அந்த ஓவியங்கள் இருப்பதை உறுதிசெய்ய அதிகாரிகளிடமிருந்து அவர்கள் முன்அனுமதியைப் பெறவேண்டியது அவசியமாகும் என்றும் அது அறிவுறுத்தியது.

மோசமான நிலையில் இருந்த இரண்டு பேருந்து நிறுத்தங்களில் தாம் வரைந்திருந்த சுவரோவியங்களை கோலாலம்பூர் மாநகர் மன்றம் அகற்றியதற்கு என்ன காரணம் என்று "குளோக்வொர்க்" என்று பரவலாக அறியப்படுபவரான சுவரோவியக் கலைஞர் ஒருவர் அண்மையில் கேள்வியெழுப்பியிருந்தார்.